06.02.2025

OS No: 73/2022

வா.சா.3 திரு.ரவி , த/பெ.ராமசாமி

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்குச் சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வழக்குச் சொத்தில் 2017ம் வருடத்திலிருந்து ஒரு கடை உள்ளது என்றால் 2018லிருந்து உள்ளது. மேற்படி கடைக்கு 2018ம் வருடத்திலிருந்து மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்கண்ட மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. கடை உள்ள இடத்தில் என்ன கடை உள்ளது என்றால் பெட்டிக்கடை உள்ளது. மேற்படி பெட்டிக்கடையை பிரதிவாதி விஜயா நடத்திவருகிறார் என்றால் சரிதான். மேற்படி கடைக்கான வரியை பிரதிவாதி விஜயா தான் செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. கடை உள்ள பகுதிக்கு கிழக்கே மாட்டுக்கொட்டாய் உள்ளது என்றால் சரிதான். மாட்டுக் கொட்டாய் கூரைக்கொட்டகையாக இருந்தது என்றால் இல்லை மேற்படி மாட்டுக்கொட்டகை தாவா வழக்கிற்கு பின்புதான் ஏற்படுத்தினார்கள். எனது அண்ணன் மகள் தான் விஜயா என்றால் சரிதான், அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு பையன், ஒரு பொண்ணு உள்ளனர். பையன் என்ன படிக்கிறான் என்றால் டிப்ளமோ முடித்துள்ளார். 2021ம் வருடம் பிரதிவாதி மகனுக்கு விபத்து ஒன்று ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. மேற்படி விபத்தின் காரணமாக பிரதிவாதியின் மகனுக்கு ஒரு வருடமாக சிகிச்சை பார்த்துவந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் தாவா வழக்கின் வாதி கோயம்புத்தூரில் இருந்தார் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்களாக கோயம்புத்தூரில் இருந்தேன் என்றால் 2 வருடங்களாக இருந்தேன். வாதி ராகவி எத்தனை வருடங்களாக கோயம்புத்தூரில் இருந்துவருகிறார் என்றால் 6 வருடங்களாக இருந்து வருகிறார். தாவா சொத்தை வாதிக்கு எனது அப்பா எழுதி கொடுத்த சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் கோயம்புத்தூரில் வாதியின் கடையில் இருந்தேன். எனது மூத்த அண்ணனுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை

என்றால் கடந்த 6 வருடங்களாக இல்லை. எதனால் பேச்சுவார்த்தை எங்களுக்குள் இல்லை என்றால் அவர் பேசவில்லை எங்களுக்குள் சண்டை எதுவும் இல்லை. மேற்படி வாதிக்கு தாவா சொத்தை எனது அப்பா எழுதி கொடுத்த விபரம் எனக்குத் தெரியும் என்றும், மேற்படி வாதிக்கு எனது அப்பா எழுதிக்கொடுத்த நடவடிக்கையை நான் தடுக்கவில்லை என்ற காரணத்திற்காக எனது அண்ணன் என்னுடன் பேசவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அடங்கிய மொத்த பகுதி 12 சென்ட் என்றால் சரிதான். மேற்படி 12 சென்ட் இடத்தை அண்ணன், தம்பி ஆகிய நாங்கள் மூவரும் தலா 4 சென்ட் வீதம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக எனது அப்பா பெயரில் எனது அண்ணன் சொத்து வாங்கி கொடுத்தவிபரம் எனக்கு தெரியும் என்றால் தவறு. 2015ம் வருடம் தாவா சொத்துக்களை எனது தகப்பனார் தலா 4 சென்ட் வீதம் எனக்கும், எனது அண்ணன்களுக்கும் பிரித்துக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி பிரித்துக்கொடுத்ததின் அடிப்படையில் தாவா சொத்தில் பிரதிவாதி 2017ம் வருடம் கடை கட்டினார் என்றால் சரியல்ல. நானும், எனது அண்ணனும் சேர்ந்து மூத்த அண்ணனுக்குரிய பாகத்தை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக கிரையபத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் தவறு. தாவா சொத்து சம்மந்தமாக காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான், வாதி தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் எனது தந்தை தாவா சொத்தை தனது மூத்த மகன் தான் தனக்கு வாங்கி கொடுத்தார் என்றும், வாதி எனது தந்தையிடம் ஆசை வார்த்தை கூறி தனது பெயருக்கு சொத்தை எழுதி வாங்கியதாக எனது அப்பா தெரிவித்தார் என்றால் தவறு. வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் FIR போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை விசாரணை செய்தார்கள். எனது தகப்பனார் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தவறு, காவல்நிலையத்தில் நீதிமன்றம் மூலம் பார்த்துக் கொள்ள சொன்னார்கள். வாதியுடன் எனக்கு பேச்சுவார்த்தை உண்டு என்றால் உள்ளது. தாவா

**சொத்தில் எனக்கு பாதி பங்கு தருவதாக வாதி சொன்னதின் அடிப்படையில் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை** இல்லை

R PANDY
Digitally signed by R PANDY
Date: 2025.02.06 16:39:33 +0530